# நடப்பு நிகழ்வுகள் மார்ச் 15.03.2018

- அமெரிக்காவின் சி.ஐ.ஏ (Central Intelligence Agency) ன் முதல் பெண் இயக்குநராக "கினா ஹாஸ்பல்" என்பரை டிரம்ப் நியமித்துள்ளார்.
- 2018 ம் ஆண்டுக்கான உலகின் மகிழ்ச்சியான நாடுகளுக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, உலகின் மிக மகிழ்ச்சியான நாடு பின்லாந்து எனவும் 2 வது நார்வே, 3 வது டென்மார்க் ஆகும். மொத்தம் 156 நாடுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தியா 133 வது இடம் பெற்றுள்ளது.
- பூமியன் குறுங்கோளை கண்டுபிடிக்க நாசா அனுப்பிய ஒஸிரிஸ் ரெக்ஸ் என்ற விண்கலம் "பென்னு" என்னும் குறுங்கோளின் படங்களை அனுப்பியுள்ளது. இது குறுங்கோள்களில் உள்ள கனிம வளங்களை கண்டுபிடிக்க 2016 ல் அனுப்பபட்டது.
- இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த உலகின் தலை சிறந்த அறிவியலாளர்களில் ஒருவரான "ஸ்டீபன் ஹாக்கிங்" (Stephen Hawking) தனது 76 வது வயதில் காலமானார்.
- இந்தியாவின் மிகப் பெரிய காற்றாலை உற்பத்திக்கான காற்றுவிசைச் சுற்றுக்கலன் (India's largest wind turbine generater) 'Suzlon' நிறுவனத்தால், திருநெல்வேலி மாவட்டம் "சங்கனேரியில்" (Sanganeri) அமைக்கப்பட்டுள்ளது. இந்த கலன் 128m ஆரம் உடையதாகும்.
- ராஜஸ்தான் மாநிலத்தின் ஆடம்பர "Place on Wheels" ரயிலானது பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் கழகத்தால் வழங்கப்படும் "அண்டின் சிறந்த சுற்றுலா ரயில் (Tourism Train of the Year) விருதை பெற்றுள்ளது.
- அதிவேக பிக்ஸ்ட் பிராண்ட்பேண்ட் சேவை (Brand Band Speed) கொண்ட நகரங்களில் 'சென்னை' முதலிடத்தில் உள்ளது. இணைய வேகம் மற்றும் பகுப்பாய்வு நிறுவனமான 'ஓக்லா' (Ookla) இந்தியாவின் மிகப் பெரிய 20 நகரங்களில் நடத்திய ஆய்வின் மூலம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. சென்னையில் பதவிறக்க வேகம் (Download Speed) 32.67mbps ஆகும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் (MGNREGA) பணிகள் ஒதுக்கீடு, நிதிகளை திறம்பட பயன்படுத்துதல் ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு "மேற்கு வங்க" "மாநிலம் முதலிடம் பிடித்துள்ளது. தமிழ்நாடு இரண்டாம் இடத்தையும், கோவா கடைசி இடத்தையும் பெற்றுள்ளது.
- ரவிந்தர்நாத் தாகூர் கையெழுத்து போட்ட அவரது வங்க மொழி நாடகம் ராஜாவின் ஆங்கில வடிவமான "தி கிங் ஆப் தி டார்க் சேம்பர்" புத்தகம் அமெரிக்காவில் ஏலம் விடப்பட்டது. இது 700 டாலர் (45500 ரூ) க்கு விற்பனை ஆகியுள்ளது.
- பெண்கள் தினத்தை முன்னிட்டு மத்திய பிரதேச மாநில மின்சார வாரியம் முழுவதும் பெண்கள் பராமரிக்கும். இந்தியாவின் முதல் 'இளஞ்சிவப்பு மின்சார மண்டலத்தை' (Pink Electricity Zone) அம்மாநிலத்தின் "இந்தூரில்" (Indoor) தொடங்கியுள்ளது.